**செய்தி வெளியீடு எண்: 95/2025** **நாள்: 25.11.2025**

**பத்திரிக்கைச் செய்தி**

**சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு சிறப்பு மெட்ரோ இரயில் பயணம்**

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3-ஆம் தேதி உலகளவில் அனுசரிக்கப்படும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை கடைப்பிடிப்பதன் ஒரு பகுதியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம் இணைந்து, இன்று (25.11.2025) அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மெட்ரோ இரயில் பயண அனுபவத்தை வழங்கும் விதமாக, இலவச மெட்ரோ இரயில் பயணத்தை ஏற்பாடு செய்தது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மொத்தம் 167 சிறப்பு குழந்தைகள், தங்கள் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுடன் இந்த பயணத்தில் பங்கேற்றனர். இவர்களுக்காக, விமான நிலையம் மெட்ரோ நிலையத்திலிருந்து ஏ.ஜி.-டி.எம்.எஸ். மெட்ரோ நிலையம் வரை பிரத்யோக சிறப்பு மெட்ரோ இரயில் ஏற்பாடு செய்யப்பட்டது.

பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளி, காஞ்சிபுரத்தில் உள்ள செவித்திறன் குறைபாடுள்ளோருக்கான சிறப்புப் பள்ளி, தஞ்சாவூரில் உள்ள பார்வையற்றோர் மற்றும் செவித்திறன் குறைபாடுள்ளோருக்கான சிறப்புப் பள்ளி மற்றும் செங்கல்பட்டில் உள்ள எலும்பியல் குறைபாடுள்ளோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் இப்பயணத்தில் பங்கேற்றனர்.

பார்வையற்றோர், செவித்திறன் மற்றும் உடல் இயக்கக் குறைபாடுடைய சிறப்புக் குழந்தைகளுக்கு மெட்ரோ இரயில் அமைப்பை அறிமுகப்படுத்துவதோடு, அவர்கள் தன்னிச்சையாகப் பயணிக்கும் திறனை (Independent Mobility) ஊக்குவிக்கவும், பொதுப் போக்குவரத்து அனுபவத்தை வழங்கவும் இந்த கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில், ஒருங்கிணைந்த மற்றும் உள்ளடக்கிய போக்குவரத்து சூழலை உருவாக்குவதில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.. பயணிகளின் பயண அனுபவத்தை மேம்படுத்தி, பாதுகாப்பான, திறமையான மற்றும் எளிதில் அணுகக்கூடிய ஒரு போக்குவரத்து அமைப்பாக சென்னை மெட்ரோ அனைவருக்கும் சேவை செய்வதை உறுதி செய்கிறது.

இந்தப் பயணத்தின் போது, அரசு மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி. சோ. மதுமதி, இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி. எம். லக்ஷ்மி, இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தின்

இணை இயக்குநர் திருமதி. பி. ஃபெர்மி வித்யா, இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை ஆலோசகர் திரு. கோபிநாத் மல்லையா, (இயக்கம் மற்றும் பராமரிப்பு), பொது மேலாளர் திரு.எஸ்.சதீஷ்பிரபு, (இயக்கம் மற்றும் பராமரிப்பு), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்..

**வெளியீடு: மக்கள் தொடர்பு துறை,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**